




புதுகை
# வரலாறு நாளிதழ்

www.varalaruu.com · varalaruu · pudugaivaralaru · varalaruu · 7502051351








வியாழன் ❖ பிப்ரவரி. 23, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 140 ❖ ரூ.10





# இன்று

**23-2-2023**

கடிமுகூர்த்தம் · சதுர்த்தி விரதம்

சிறுகீரை : பித்தம், மலச்சிக்கலை குறைத்து உடலுக்கு ஊக்கம் தரும்
சக வருடம் 1944 பால்குன 04

| சுபகிருது மாசி 11 | FEB - THU வியாழன் | ஷ.°பான் 2 வளர்பிறை 054 / 311 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். திரிதியை 04.10 (கா. 08.12) உத்திரட்டாதி 06.58 (கா. 09.19) தியாஜ் 36.24 அகஸ் 29.19 சித்த. சதுர்த்தி விரதம். சுபமுகூர்த்தம். மிலட்டூர் விநாயக பெருமான் புறப்பாடு. வேதாரண்யம் சிவபெருமான் புறப்பாடு. தேவக்கோட்டை ரெங்கநாதர் புறப்பாடு. திருப்பதி புஷ்பாங்கி சேவை.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 10.30-11.30 | 12.30-1.30 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை : ——— | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; கும்ப லக்னம் இருப்பு நா. 3 வி. 10; சந்திராஷ்டமம் பூரம்; கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 6.32

சூர்நம் பார்க்கின் சுற்றம் இல்லை

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | உற்சாகம் |
| ரிஷபம் | இன்சொல் |
| மிதுனம் | புகழ் |
| கடகம் | ஆதரவு |
| சிம்மம் | சலனம் |
| கன்னி | கவனம் |
| துலாம் | பக்தி |
| விருச்சி | ஆர்வம் |
| தனுசு | களிப்பு |
| மகரம் | ஜெயம் |
| கும்பம் | உதவி |
| மீனம் | தாமதம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## அதிமுக அரசு கஜானாவை காலி செய்யாமல் இருந்திருந்தால்
# அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



மன்னார்குடி பிப்.23-

முந்தைய அதிமுக அரசு கஜானாவை காலி செய்யாமல் இருந்திருந்தால் அனைத்து வாக்குறுதிகளும் இன்று நிறைவேற்றப்பட்டிருக்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

மன்னார்குடியில் திமுக பிரமுகர் இல்ல திருமண விழாவில் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகையில், திருவாரூர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்யும் போது என்னையே அறியாமல் கம்பீரமாக இருக்கிறேன். திருவாரூர் வந்துள்ளது எனக்குள் இனம் புரியாத மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. சீர்திருத்தத் திருமணங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது அண்ணா தலைமையிலான திமுக அரசு. மக்கள் போற்றும் திராவிடமாடல் ஆட்சியாக இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2 ஆண்டுகளாகதமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சி உங்களுடைய ஆட்சி.

அரசு அறிவித்த திட்டங்கள் உரிய முறையில் நடக்கிறதா என்பதை கவனித்து நடவடிக்கை எடுக்கக் கூடியவன் தான் இன்றுநீங்கள்பெற்றிருக்கும் முதலமைச்சர்.கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தை தொடங்கி வைத்து ஒவ்வொரு பகுதியாக ஆய்வு செய்து வருகிறேன். பருவம் தவறிய மழையால் பாதித்த விவசாயிகளுக்கு ஒரு வாரத்தில் நிவாரணம் வழங்கப்படும். கடந்த அதிமுக அரசு கஜானாவை காலி செய்யாமல் இருந்திருந்தால் அனைத்து வாக்குறுதிகளும் நிறைவெற்றப் பட்டிருக்கும். தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவில் நிச்சயம் நிறைவேற்றப்படும். வாக்குறுதிகளை நிறைவேற்ற 5 ஆண்டுகள் உள்ளது என்பதால் அது வரை பொறுத்திருங்கள் என நான் கூறவில்லை. மீதமிருக்கும் வாக்குறுதிகள் விரைவில் நிறைவேற்றப்படும் என கூறினார்.

# தென் மண்டல தேசிய எறிபந்து சாம்பியன்ஷிப் போட்டி தமிழக அணி சாம்பியன்



எர்ணாகுளம் பிப்.23-

எர்ணாகுளத்தில் நடைபெற்ற தென் மண்டல தேசிய எறிபந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழக அணி சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது.

கேரளா மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம் மாவட்டத்தில் 15 வது தென் மண்டல தேசிய எறிபந்து சாம்பியன்ஷிப் போட்டியானது பிப்ரவரி 17 முதல் 19ம் தேதி வரையில் நடைப்பெற்றது. இதில் தமிழக அணி சீனியர் பிரிவில் ஆண்கள் அணி முதலிடமும் பெண்கள் அணி இரண்டாம் இடமும் ஜுனியர் பிரிவில் ஆண்கள் அணி இரண்டாம் இடமும் பெண்கள் அணி முதலிடமும் பிடித்து சாதனை படைத்தது வெற்றி பெற்ற தமிழக வீரர், வீராங்கனைகளுக்கு தமிழக எறிபந்து சங்கத்தின் தலைவர் மற்றும் இந்திய எறிபந்து சங்கத்தின் பொருளாளராக உள்ள பாலவிநாயகம் மற்றும் தமிழக எறிபந்து சங்கத்தின் செயலாளர் ராஜா ஆகியோர் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.




# மதுரை பசுமலை திருமலை நாயக்கர் கல்லூரியில் வர்த்தக கண்காட்சி



மதுரை பிப்.23-

மதுரை பசுமலையில் உள்ள திருமலை நாயக்கர் கல்லூரியில் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டு துறை இணைந்து நடத்தும் வர்த்தக கண்காட்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை கல்லூரி செயலாளர் விஜயராகவன் தொடங்கி வைத்தார். கல்லூரி தலைவர் ராஜகோபால், பொருளாளர் ஆழ்வார்சாமி, துணைத் தலைவர் ஜெயராமன், முதல்வர் வெங்கடேசன், ஒருங்கிணைப்பாளர் ராமசுப்பையா மற்றும் இயக்குனர்பிரபுஆகியோர் கலந்து கொண்டு முதல் விற்பனையை பெற்றனர்.

துறைத் தலைவர் நாகசுவாதி, ஒருங்கிணைப்பாளர்கள் இளம்பிறை, சண்முகப்பிரியா, விஜயலட்சுமி, மஞ்சுளா, பாபி, தேன்மொழி, நந்தினீஸ்வரி ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். செய்தி தொடர்பாளர் ரஞ்சித்குமார், கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் 60-க்கும் மேற்பட்ட கடைகளும், 10,000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் ஒன்றிய குழு கூட்டம்



தென்காசி பிப்.23-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றிய குழு கூட்டம் யூனியன் அலுவலகத்தில் நடைபெற்றது.

தலைவர் சுப்பம்மாள் பால்ராஜ் தலைமை வகித்தார், துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், ஆணையாளர் கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முறையாக கூட்டம் நடைபெறுவதை தெரியப்படுத்தி அஜெண்டா கொடுக்காததால் மாரியம்மாள், அருணாச்சல பாண்டியன், கீதா மணிகண்டன், ரோஜா முருகன், மாரிச்செல்வி, அதிமுக கவுன்சிலர் சத்திய கலா தீபக் கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

இதில் ஒன்றிய கவுன்சிலர்கள் சிங்கிலிபட்டி மணிகண்டன், பகவதியப்பன், சித்ரா கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். கூட்டத்தில் 32 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் போகநல்லூர் மயான நன்மை கூடம் அமைத்தல், சொக்கம்பட்டி நேதாஜி தெரு, பசும்பொன் 2-வது தெரு, சிமெண்ட் தளம் அமைத்தல், நயினாநகரம், சங்குபுரம் அப்துல் கலாம் நகர் பகுதியில் வாறுகால் அமைத்தல், பெருமாள் கோவில் தென்புறம் சிமெண்ட் தளம் அமைத்தல், திரிகூபுரம் பாத்திமா நகர் கீழத்தெரு சிமெண்ட் தளம் அமைத்தல், தெற்கு குளம் மறுகால் ஓடையில் தடுப்புச் சுவர் அமைத்தல், சமுதாய நலக்கூடம், சின்னத்தம்பி நாடானூர் அம்மன் கோவில் தெருவில் வளாகத்தில் சமுதாய நலக்கூடம் அமைத்தல், பூ பாண்டிபுரம் அம்மன் கோவில் தெரு, துரைசாமிபுரம் பிள்ளையார் கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல், புன்னையாபுரம் ஊராட்சி ஊரணியில் நீர் வெளியேற்ற சிமெண்ட் வடிகால் அமைத்தல் உள்ளிட்ட 32 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கடன் தொல்லை காரணமாக அரியலூரில் ரயில் முன் பாய்ந்து சிமெண்ட் ஆலை அலுவலர் தற்கொலை



அரியலூர் பிப்.23-

கடன் தொல்லை காரணமாக, அரியலூரில் ரயில் முன் பாய்ந்து, தனியார்சிமெண்ட் ஆலை அலுவலர் தற்கொலை செய்து கொண்டார்.

ராணிப்பேட்டை மாவட்டம்,அரக்கோணம் தாலுகா, குயினிபினி பேட்டை கிராமத்தைச் சேர்ந்த, கஜேந்திரடு மகன் நரசிம்மலு(44). அரியலூர் மாவட்டம், ரெட்டிபாளையம் கிராமத்தில் உள்ள, அல்ட்ராடெக்சிமெண்ட் ஆலை தொழில்நுட்ப பிரிவில், துணை மேலாளராகபணியாற்றிய இவருக்கு, வனிதா என்கிற மனைவியும்,சென்னையில் ஒருதனியார் கல்லூரியில், கல்வி பயிலும் மகளும் உள்ளனர்.

அரக்கோணத்தை சேர்ந்த விவேக் என்பவரிடம், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, 10 லட்சம் ரூபாய் கடனாக வாங்கிய இவர், தனது போன் பே மூலம் 30 லட்சம் ரூபாய்க்கு மேல் திருப்பிசெலுத்தியுள்ளார். ஆனாலும் அவர் வாங்கிய கடன் தீரவில்லை. பணத்தை உடனடியாக திருப்பிக் கொடுக்குமாறு கடன் கொடுத்த விவேக் என்பவர் மிரட்டி கேட்டதாககூறப்படுகிறது.

இதனால் மனம் உடைந்த நரசிம்மலு, 21-ஆம் தேதி மாலை, அரியலூர் அருகே, தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் கீழ் உள்ள ரயில்வேதண்டவாளத்தில், திருச்சியிலிருந்து ஹௌரா நோக்கி சென்று கொண்டிருந்த, ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயில் முன்பு பாய்ந்து, தற்கொலை செய்து கொண்டார்.

உடல் துண்டுகளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த, நரசிம்மலுவின் சடலத்தை கைப்பற்றிய ஆர். பி. எப். சிவக்குமார் உள்ளிட்ட அரியலூர் ரயில்வே போலீசார், பிரேதபரிசோதனைக்காக, அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதுபற்றி,விருத்தாஜலம் ரயில்வே போலீஸ் எஸ்.ஐ சின்னப்பன் தலைமையிலான காவலர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ் இளங்கோவன் பங்கேற்பு



தென்காசி பிப்.23-

தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் தலைமை திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ் இளங்கோவன் பங்கேற்றார்.

தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் இலஞ்சி ட்ரெஸ்ஸில் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமை வகித்தார், தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவ.பத்மநாதன் வரவேற்புரை ஆற்றினார், தலைமை திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ் இளங்கோவன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசினார். இந்நிகழ்ச்சியினை பொதுக்குழு உறுப்பினர் அருள் தொகுத்து வழங்கினார், இக்கூட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் 70 -வது பிறந்த நாளை முன்னிட்டு மார்ச் 1-ஆம் தேதி மாவட்டம் முழுவதும் பொதுக்கூட்டம், விளையாட்டுப் போட்டிகள், நலத்திட்ட உதவிகள், வழங்கி சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக அமைப்பாளர் முருகேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, முத்துப்பாண்டி, ஷேக் தாவூது, ஆறுமுகசாமி, ஜேசு ராஜன், விவசாய அணி அப்துல் காதர், பொருளாளர் ஷெரீப், மாவட்ட துணை செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், கனிமொழி, கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், ரவிச்சந்திரன், சமுத்திரபாண்டி, ராஜேஸ்வரன், சாமித்துரை, கதிர்வேல் முருகன், தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, அன்பழகன், செல்லத்துரை, சிவன்பாண்டியன் ஜெயக்குமார், ரவிசங்கர், மகேஷ் மாயவன், அழகுசுந்தரம், திவான் ஒலி, சுரேஷ் நகர செயலாளர்கள் வெங்கடேசன், அப்பாஸ், ஜெயபாலன், யூனியன் சேர்மன்கள் ஷேக் அப்துல்லா, திவ்யா மணிகண்டன், துணைத் தலைவர் ஹைவேந்திரன் தினேஷ், நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வேலுச்சாமி, சுப்பையா, கோமதிநாயகம், இசக்கி பாண்டியன், வளன் அரசு, மசூது பூங்கொடி, குட்டி, ஜீவானந்தம் கருப்பண்ணன், மணிகண்டன் மற்றும் மாரியப்பன், கருணாநிதி, சேக்பரித், ராமராஜ், முருகன், முகைதீன் கனி, ஹக்கீம், ராஜா, முத்துக்குமார், மஜீத், முத்துராஜ், மதி, நல்லையா, மசூது, முருகானந்தம், சுப்பிரமணியன், ராஜ், அருணாசல பாண்டியன், மைதீன்ஒலி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். முடிவில் கென்னடி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# தென்காசியில் தமிழ் புலிகள் கட்சி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி பிப்.23-

தென்காசியில் தமிழ் புலிகள் கட்சி சார்பாக நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் உருவ பொம்மையை எரித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் புதிய பேருந்து நிலையம் முன்பாக தமிழ் புலிகள் கட்சி சார்பாக, ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் பொது மேடையில் பூர்வகுடி தமிழக அருந்ததியர் மக்களை வந்தேறிகள் என்றும்தூய்மை தொழில் செய்ய ஆந்திராவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் இழிவாக பேசியதை கண்டித்து, நாம் தமிழர் கட்சிஒருங்கிணைப்பாளர் அகிலன், முருகன், அசோக் பாண்டியன், சந்திரசேகர், சரத் வள்ளுவன், புலி மாரியப்பன், தமிழ் குமார், கதிர் வள்ளுவன், மாரிச்செல்வம், செல்வராஜ், முத்துராஜ், வாசு காளியப்பன், கொட்டாக்குளம் மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை தடுத்துநிறுத்தியதென்காசி காவல்துறை அதிகாரிகள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்தனர்.

# சென்னையில் அனுமதியின்றி பேரணி நடத்தியதாக பாஜக தலைவர் அண்ணாமலை உட்பட 3,500 பேர் மீது வழக்குப்பதிவு



சென்னை பிப்.23-

சென்னையில் அனுமதியின்றி பேரணி நடத்தியதாகபாஜகமாநில தலைவர் அண்ணாமலை உட்பட 3,500 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம், பிரபு என்ற ராணுவ வீரர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும், தி.மு.க அரசைக் கண்டித்தும் மெழுகுவர்த்தி ஏந்தி பிரம்மாண்ட பேரணியில் ஈடுபட்டார். இந்நிலையில், சென்னையில் அனுமதி இன்றிமெழுகுவர்த்திஏந்தி பேரணி சென்றதற்காக அண்ணாமலை உட்பட 3500பேர் மீதுவழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது. ராணுவ வீரர் கொலையை கண்டித்துநேற்றுமுன்தினம் மாலை பேரணியாக சென்று பாஜகவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கரு.நாகராஜன் தலைமையில் பேரணி நடந்த நிலையில் 3,500 பாஜகவினர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. சட்டவிரோதமாககூடுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் திருவல்லிக்கேணி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாளையம், கட்சிக்காரன் பட்டியை சேர்ந்த மாணிக்கம் என்ற கபடி விளையாட்டு பயிற்சியாளர் மாரடைப்பால் உயிரிழந்ததை தொடர்ந்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 2 லட்சம் நிதி உதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டதையடுத்து கபடி பயிற்சியாளர் மாணிக்கம் குடும்பத்திற்கு மாவட்ட கலெக்டர் விசாகன் இரண்டு லட்சம் நிதியுதவிக்கான காசோலையை வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் லதா, உதவி கலெக்டர் பிரியங்கா ஆகியோர் உள்ளனர்.

# அதானி குழும மோசடி தொடர்பான விசாரணையின் நிலவரம் என்ன என்று மத்திய அரசுக்கு காங்கிரஸ் கேள்வி



டெல்லி பிப்.23-

அதானி குழும மோசடி தொடர்பான விசாரணையின் நிலவரம் என்ன என்று மத்திய அரசுக்கு காங்கிரஸ் கேள்வி விடுத்துள்ளது.

இந்திய தொழிலதிபர் கவுதம் அதானி தொடர்புடைய போலி நிறுவனங்கள் பங்குச்சந்தையில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக அமெரிக்காவை சேர்ந்த பங்குச்சந்தை முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் குற்றம் சாட்டியது. இந்த குற்றச்சாட்டுகளை அதானி குழுமம் மறுத்துள்ளது.இருப்பினும், இது தொடர்பாக நாடாளுமன்றகூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும்என்றுகாங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தின. பிரதமர் மோடிக்கும், அதானிக்கும் தொடர்பு இருப்பதாக அக்கட்சிகள் கூறி வருகின்றன.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சி, மத்திய அரசுக்கு மேலும் ஒரு கேள்வி விடுத்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியிருப்பதாவது :- அதானி குழுமம் தொடர்புடைய போலி நிறுவனங்களின் பங்குச்சந்தை முறைகேடுகள் குறித்து பங்குச்சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான 'செபி' சிறிது காலமாக கண்காணித்து வந்ததாக எங்களுக்கு தெரியும். அந்த விசாரணையின் நிலவரம் என்ன? மௌனத்தை கலையுங்கள். மேலும், பொதுத்துறை நிறுவனங்களுக்கும், ஒரு ரஷ்ய நிறுவனத்துக்கும் இடையே சந்தேகத்துக்கிடமான பண பரிமாற்றம் நடந்துள்ளது. எண்ணெய்க்காக ரஷ்ய நிறுவனத்துக்கு பொதுத்துறை நிறுவனங்கள் அதிக விலை கொடுத்துள்ளது. அதற்கு பிரதி உபகாரமாக, மற்றொரு எரிசக்தி வளத்துக்காக அரசியல் தொடர்புடைய ஒரு இந்திய தனியார் நிறுவனத்துக்கு அந்தரஷிய நிறுவனம் அதிக விலை கொடுத்துள்ளது. இந்த பிரச்சினையில் பிரதமர் மோடி தனது மௌனத்தை கலைக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## சீன விவகாரத்தில் வெளியுறவு அமைச்சர் தோல்வி அடைந்துவிட்டார்

# குற்றச்சாட்டு

## நமது எல்லையையும் இறையாண்மையையும் பாதுகாக்கும் ஆற்றல் நமக்கு இல்லை என வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகிறார்

## இது நமது ராணுவத்தை இழிவுபடுத்தும் செயல்: காங்கிரஸ்

புதுடெல்லி, பிப்.23-

**இந்திய வெளியுறவு அமைச்சராக இருக்கும் ஜெய்சங்கர் தனது பணியில் தோல்வி அடைந்துவிட்டதாக காங்கிரஸ் குற்றம்சாட்டி காரணங்களை அடுக்கியுள்ளது.**

சீன எல்லை விவகாரத்தில் மத்திய அரசின் அணுகுமுறையை காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி விமர்சித்திருந்தார். இந்நிலையில், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரிடம் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதில் அளித்த ஜெய்சங்கர், ''சீன பொருளாதாரம் மிகப் பெரியது. நமது பொருளாதாரம் மிகச் சிறியது. அப்படி இருக்கும்போது சீனாவுடன் போர் புரிவதை நாம் தேர்ந்தெடுக்க முடியாது'' என தெரிவித்திருந்தார்.



இதைச் சுட்டிக்காட்டி வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை, காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீநதே விமர்சித்துள்ளார். அவர் கூறி இருப்பதாவது: ''வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கையை தரம் தாழ்த்திவிட்டார். அவரது கருத்து கண்டிக்கத்தக்கது. தொழிலதிபர்களின் ஒப்பந்தங்களை பாதுகாக்கும் நோக்கம் கொண்டதாக அவரது பேச்சு இருக்கிறது.

நமது எல்லையையும் இறையாண்மையையும் பாதுகாக்கும் ஆற்றல் நமக்கு இல்லை என வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகிறார். இது நமது ராணுவத்தை, நமது ராணுவ வீரர்களை இழிவுபடுத்தும் செயல். அவர்களின் தன்னம்பிக்கையை குலைக்கக்கூடிய செயல். வெளியுறவுத் துறை அமைச்சர் ஒருவரின் மிக மோசமான கருத்து இது. வெளியுறவு அமைச்சராக ஜெய்சங்கர் தோல்வி அடைந்துவிட்டார்.

சீனாவில் அதிககாலம் இந்தியதூதராகஇருந்தவர் என ஜெய்சங்கர் தன்னை கூறிக்கொள்கிறார். சீனாவை ஒட்டிய எல்லையில் ஏப்ரல் 2020-க்கு முன்பு இருந்த நிலை மீண்டும் எப்போது வரும் என அவரால் கூற முடியுமா? சீனா உடன் இந்தியா 100 பில்லியன் டாலர் அளவுக்கு வர்த்தக பற்றாக்குறையைக் கொண்டிருக்கிறது. அவர்கள் தங்கள் ராணுவத்தை வலுப்படுத்திக்கொள்ள நமது பணம் பயன்படுத்தப்படுகிறது. சீனாவில் நீண்ட காலம் இந்திய தூதராக இருந்த ஜெய்சங்கர், எல்லையில் நிகழ்ந்த சீன ஆக்கிரமிப்பு குறித்து என்ன கூறுவார்? நமது வீரர்கள் செய்த உயிர்த் தியாகம் குறித்து அவரால் ஏதாவது கூற முடியமா?

பாஜக தனது அரசியல் எதிரிகளை தொடர்ந்து தாக்கி வருகிறது. ஆனால், நமது நாட்டின் பாதுகாப்புக்கானவிலையாக அது மாறிவிடக்கூடாது. வெளியுறவுக் கொள்கை என்பது நாட்டின் நலனுக்கானதாக இருக்க வேண்டும். அதானி போன்றஒருநிறுவனத்தின் நலனுக்கானதாகஇருக்கக் கூடாது'' என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீநதே குற்றம் சாட்டியுள்ளார்.

## அனல் மின் நிலையங்கள் முழுத்திறனுடன் மின்சாரம் உற்பத்தி செய்ய மத்திய அரசு உத்தரவு

டெல்லி பிப்.23-

அனல் மின் நிலையங்கள் தங்களது முழு உற்பத்தி திறனுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அனல் மின் நிலையங்கள் தங்களது முழு உற்பத்தி திறனுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. டாடா பவர், அதானி மின் நிலையங்கள், எஸ்ஸார் மின் உற்பத்தி நிலையம், ஜே.எஸ். டபிள்யூரத்னகிரி, மீனாட்சி எனர்ஜி உள்பட 15 அனல் மின் நிலையங்களுக்கு இது தொடர்பான நோட்டீசை பிறப்பித்துள்ளது.

அதில் கூறப்பட்டு இருப்பதாவது, நாட்டின்



கோடைகால மின் தேவை அதிகரித்து வருகிறது. ஆகவே, மார்ச் 16-ந் தேதியில் இருந்து ஜூன் 15-ந் தேதி வரை, தங்களது அனல் மின் நிலையங்கள், இறக்குமதி நிலக்கரியை பயன்படுத்தி, தங்களது முழு உற்பத்தி திறனுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும். இதன்மூலம் கோடை கால மின் தட்டுப்பாட்டை தவிர்க்க முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஈரோட்டில் முன்னாள் அமைச்சர்களுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை

ஈரோடு பிப்.23-

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 27-ந் தேதி நடக்கிறது. தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், அ.தி.மு.க. சார்பில் கே.எஸ். தென்னரசு, தே.மு.தி.க. சார்பில் ஆனந்த், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இவர்கள் தவிர சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். 77 பேர் தேர்தல் களத்தில் உள்ளதால் பிரச்சாரம் அனல் பறந்து வருகிறது. 25-ந் தேதி மாலை 5 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைகிறது.

வருகிற 24, 25-ந் தேதிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் செய்கிறார். அதே நாளில் அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் பிரசாரம்



செய்கிறார். இந்நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் மூத்த நிர்வாகிகளுடன் இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார். ஈரோடு, வில்லரசம்பட்டியில் உள்ள தனியார் விடுதியில் ஆலோசனை நடைபெற்றது. ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் பணிகள் குறித்தும் மேலும் வரும் 24-ஆம் தேதி எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்ள உள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் குறித்தும் முன்னாள் அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார். ஆலோசனையில் முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், சி.வி. சண்முகம், தங்கமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### சென்னையில் இருந்து வெளிநாடுகளுக்கு

## போலி கொரோனா மருந்து அனுப்பி ரூ.6 கோடி மோசடி செய்த கணவன்–மனைவி கைது



சென்னை பிப்.23-

வெளிநாடுகளுக்கு போலி கொரோனா மருந்து அனுப்பி ரூ.6 கோடி மோசடியில் ஈடுபட்ட கணவன், மனைவியை போலீசார் கைது செய்தனர்.

சென்னை, கீழ்கட்டளையில் முருகப்பா ஹோல்சேல்ஸ் சப்ளையர்ஸ் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தை ஹரிகரசுப்பிரமணியம் (37) மற்றும் அவரது மனைவி காஞ்சனா (25) ஆகியோர் நடத்தி வந்தனர். இவர்கள் மீது அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் கொடுத்தது.


அதில், வெளிநாடுகளுக்கு போலியான கொரோனா மருந்தை சப்ளை செய்து, ரூ.6.30 கோடி மோசடி செய்து விட்டதாக, அந்த புகாரில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதுதொடர்பாக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி, ஹரிகரசுப்பிரமணியம், காஞ்சனா ஆகியோரை கைதுசெய்தனர். காஞ்சனா கைக்குழந்தையுடன் கைதானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதுக்கோட்டை சிப்காட் அருகே அரசு பேருந்தும் காரும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் பலி – 9 பேர் காயம்

**புதுக்கோட்டை பிப்.23-**

புதுக்கோட்டை சிப்காட் அருகே அரசு பேருந்தும் காரும் மோதி விபத்துக்குள்ளானது.

புதுக்கோட்டை சிப்காட் அருகே அரசு பேருந்தும் காரும் நேருக்கு நேர் மோதியதில் காரில் பயணித்த ஒருவர் உயிரிழந்த



நிலையில் ஒருவயது குழந்தை உள்பட 9 பேர் காயம் அடைந்தனர்.

அதி வேகமாக வந்து மோதியதால் காரும் பேருந்தும் உருக்குலைந்துகாணப்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து திருக்கோகர்ணம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சியில் 26.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள புதிய ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையத்திற்கான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கலைவாணன், டிஆர்பி ராஜா, திருவாரூர் கலெக்டர் சாரு ஸ்ரீ, மன்னார்குடி சேர்மன் சோழராஜன், ஆணையர் சென்னு கிருஷ்ணன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.**

### அரிமளம் அருகே அட்மா திட்டத்தின் கீழ்

## முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

அரிமளம் பிப்.23-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டு, முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் என்ற தலைப்பில் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் K. ராயபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த பயிற்சிக்கு மாவட்ட



ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் ரவிச்சந்திரன் வேளாண்மை துணை இயக்குநர் தலைமை வகித்து தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தரிசு நிலத்தை விளை நிலமாக்குதல் தொழில் நுட்பங்களையும், குறிப்பாக தரிசு நிலங்களில் குறைவான நீரைக்கொண்டு சிறு தானியங்கள் பயிர் செய்வதைபற்றியும்மேலும் 2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்படுவதை பற்றியும் விளக்கிக் கூறினார். வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி பிரதம மந்திரியின் விவசாய கௌரவநிதி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள விவசாயிகள் அனைவரும் மின்னணு முறையில் புதுப்பித்து கொள்ளும் முறைகள் பற்றியும், விவசாய கடன் அட்டையின் முக்கியத்துவம் மற்றும் அதனை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் விளக்கி கூறினார். வேளாண்மை அலுவலர் ரெங்கசாமி வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் உழவன் செயலி பயன்பாடு மற்றும் செயல்பாடு பற்றி பேசினார்.

இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியகுமார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாண்டியன், காளிதாசன் பயிற்சிக்கான முன்னேற்பாடுகள் செய்து கலந்து கொண்டனர். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் ஆனஸ்ட்ராஜ் நன்றி கூறினார்.

## டெல்லி மேயர் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியின் ஷெல்லி ஓபராய் வெற்றி

புதுடெல்லி, பிப்.23-

நீண்ட இழுபறிக்குப் பின்னர் நேற்று டெல்லி மேயர் தேர்தல் நடந்தது. இதில் ஆம் ஆத்மி கட்சியின் வேட்பாளர் ஷெல்லி ஓபராய் மேயராக தேர்வு செய்யப்பட்டார். ஆம் ஆத்மி வேட்பாளர் ஷெல்லி ஓபராய் 150 வாக்குகள் பெற்றார். பாஜகவின் வேட்பாளர் ரேகா குப்தா 116 வாக்குகள் பெற்றார். இதனையடுத்து ஆம் ஆத்மியின் ஷெல்லி ஓபராய் டெல்லி மாநகராட்சியின் புதிய மேயராக அறிவிக்கப்பட்டார்.

ஷெல்லி ஓபராய்க்கு வாழ்த்து தெரிவித்த துணை முதல்வர் மனிஷ் சிசோடியா, "குண்டர்கள் தோற்றனர், மக்கள் வென்றனர்" என்று வாழ்த்தைப்பதிவுசெய்தார். மனிஷ் சிசோடியாவின் ட்வீட்டைத் தொடர்ந்து ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளரும் டெல்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் தனதுட்விட்டர்பக்கத்தில் இந்தியில், "இன்று டெல்லி மாநகராட்சியில், போக்கிரிகளை மக்கள் வென்றுள்ளனர். டெல்லி மக்களுக்கு வாழ்த்துகள்" என்று பதிவிட்டு



அதில் மேயர் ஓபராய் ஷெல்லியையும் டேக் செய்துள்ளார்.

டெல்லி மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளம் பெண் ஷெல்லி ஓபராய், டெல்லி மாநகராட்சியின் 86வது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்றவராவார். 39 வயதான ஷெல்லி ஓபராய், இந்திய வர்த்தக கூட்டமைப்பின் (ஐசிஏ) வாழ்நாள் உறுப்பினராகவும் உள்ளார்.

வலுவான கல்விப் பின்னணிகொண்டுள்ளார். கல்லூரியில் இளங்கலை படித்தபோது கல்வியில் சிறந்து விளங்கியதற்காக மிஸ் கம்லா ராணி பரிசைப் பெற்றவராவார். முதுகலைப் பட்டத்தை ஹிமாச்சலப் பிரதேச பல்கலைக்கழகத்தில் பயின்றார். பின்னர் டெல்லி இந்திராகாந்திதிறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் மேலாண்மை படிப்புகள் பள்ளியில் தத்துவத் துறையில் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார். இவர் டெல்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியாகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இத்தகைய கல்விப் பின்னணி கொண்டவர் கடந்த 2013ஆம் ஆண்டு ஆம் ஆத்மி கட்சியில் இணைந்தார். இந்நிலையில் தற்போது டெல்லி மாநகராட்சியின் மேயர் ஆகியிருக்கிறார்.

டெல்லிமாநகராட்சியில் மொத்தமுள்ள 250 இடங்களுக்கு கடந்த டிசம்பரில் தேர்தல் நடைபெற்றது. இதில், ஆம் ஆத்மி 134 இடங்களை கைப்பற்றி பெரும்பான்மை பெற்றது. பாஜக 104 இடங்களுடன் இரண்டாமிடம் பெற்றது. இந்நிலையில், மேயர் தேர்தலுக்கு முன் 10 நியமன உறுப்பினர்களை துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனா நியமித்தார். இதன் மூலம் டெல்லி மாநகராட்சியை பாஜக கைப்பற்ற முயற்சிப்பதாக ஆம் ஆத்மி குற்றம்சாட்டியது.

இதனால் மாமன்ற கூட்டத்தில் ஆம் ஆத்மி பாஜக உறுப்பினர்கள் இடையே ஏற்பட்ட மோதலால் கடந்த 2 மாதங்களில் மேயர் தேர்தல் 3 முறை ஒத்திவைக்கப்பட்டது. டெல்லி மேயர் தேர்தல் தொடர்பாக ஆம் ஆத்மி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் பிப்.18-ல் பிறப்பித்த உத்தரவில், "மேயர் தேர்தலில் நியமன உறுப்பினர்கள் வாக்களிக்க முடியாது. மேயர் தேர்தலுக்கு பிறகு அவரது தலைமையிலான கூட்டத்தில் துணை மேயர் தேர்வு செய்யப்பட வேண்டும்" என்று கூறியது. தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக வந்ததையடுத்து ஆளுநருக்கு தேர்தல் தேதியை அரசு பரிந்துரைக்க, ஆளுநரும் இசைவு தெரிவித்தார். அதன்படி நேற்று தேர்தல் நடைபெற்றது. இதில் ஆம் ஆத்மி வேட்பாளர் ஷெல்லி ஓபராய் வெற்றி பெற்றுள்ளார்.

## ஆர்எஸ்எஸ் பேரணிக்கு எதிராக தமிழக அரசு மேல்முறையீடு செய்ததற்கு மார்க்சிஸ்ட் பாராட்டு

சென்னை பிப்.23-

ஆர்எஸ்எஸ் பேரணி விவகாரத்தில் சட்டம் - ஒழுங்கு சார்ந்த விஷயங்களை உயர் நீதிமன்றம் கவனத்தில் எடுக்க தவறிவிட்டதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஆர்.எஸ்.எஸ் பேரணிக்கு உயர் நீதிமன்றம் விதித்திருந்த கட்டுப்பாடுகளை நீக்கிய இரண்டு நீதிபதிகள் அமர்வின் உத்தரவிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு



செய்யவேண்டும் என சி.பி.ஐ (எம்) கோரியது. தற்போது தமிழக அரசு மேல்முறையீடு செய்திருப்பது வரவேற்புக்குரியதாகும்.

மக்களிடையே வெறுப்பினை பரப்பி, மோதலை உருவாக்கும் சக்திகளை ஜனநாயக இயக்கங்களைப் போல கருத முடியாது. வெறுப்பு அரசியலையே தனது திட்டமாக வைத்துள்ள ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கடந்த கால தற்போதைய செயல்பாடுகளை கணக்கில் கொண்டுதான் அவர்களின் பேரணிக்கு அனுமதி கூடாது என்கிறோம். இவ்விசயத்தில், குறிப்பாக சட்டம் - ஒழுங்கு சார்ந்த விஷயங்களை உயர் நீதிமன்றம் கவனத்தில் எடுக்க தவறிவிட்டது. எனவே, உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்திருப்பது சரியானது. பாராட்டுக்குரியது." என்று அந்தப் பதிவில் கூறியுள்ளார்.



**சென்னை மெரினா பட்டினப்பாக்கம் நொச்சிக்குப்பம் பகுதியில் உள்ள மீன் கடைகளை அகற்ற மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததால் மீனவர்கள் சாலை மறியல். சாலையோரம் கடை வைப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் நடவடிக்கை**



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமையில் மதுரை நிகில் பௌண்டேஷன் பயிற்சியாளர்கள் கலைச்செல்வன், நீதி ராஜா ஆகியோர் மாணவர்களுக்கு உன்னிடத்தில் நான், பாராட்டு, ஆழ்ந்து சிந்தித்தல், கவனித்தல் என்கிற தலைப்பில் வாழ்வியல் பயிற்சி அளித்தனர்.

# ஆதனக்கோட்டை பகுதிகளில் சம்பா பயிர் அறுவடை செய்யும் பணி தீவிரம்

ஆதனக்கோட்டை பிப்.23-

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்தாண்டு 94,227 ஹெக்டேர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்யப்பட்ட நிலையில் இந்தாண்டு 87,400 ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே விவசாயிகள் சம்பா சாகுபடி செய்துள்ளனர். இந்த ஆண்டு பருவமழை இயல்பை விட குறைவாக பெய்ததால் கடந்த ஆண்டை காட்டிலும் இந்தாண்டு மாவட்டத்தில் 7 ஆயிரம் ஹெக்டேர் குறைவாக சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை வட்டாரத்தில் கடந்தாண்டு 4,457 ஹெக்டேர் சம்பா பயிரிடப்பட்டிருந்த நிலையில் இந்தாண்டு 3,810 ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே விவசாயிகள் சம்பா சாகுபடி செய்துள்ளனர். தற்போது சம்பா அறுவடை பணிகள் முடிவடையும் தருவாயில் புதுக்கோட்டை வட்டாரம் ஆதனக்கோட்டையில் விவசாயி ஒருவரது வயலில் நெற்கதிர் அறுக்கும் இயந்திரம் மூலம் சம்பா அறுவடை செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெறுகிறது.

# சென்னை அயனாவரத்தில் ரவுடி பெண்டு சூர்யா மீது போலீசார் துப்பாக்கிச்சூடு

சென்னை பிப்.23-

சென்னை, அயனாவரம் பகுதியில் ரவுடி பெண்டு சூர்யாவை பெண் எஸ்.ஐ துப்பாக்கியால் சுட்டு பிடித்தார்.

அயனாவரத்தில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த உதவி ஆய்வாளர் சங்கரை 4 பேர் கொண்ட கும்பல் கம்பியால் தாக்கி விட்டு தப்பி ஓடினர். பைக்கில் தப்பியோடிய 3 பேரில் 2 பேரை போலீசார் கைது செய்த நிலையில் ரவுடி பெண்டு சூர்யா என்பவர் தலைமறைவானார். இந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் தனது அக்கா



வீட்டில் பதுங்கியிருந்த சூர்யாவை போலீசார் கைது செய்தனர். இதையடுத்து அயனாவரம் நியூ ஆவடி சாலையில் திடீரென பெண்டு சூர்யா, கத்தியால் போலீசாரை தாக்கிவிட்டு தப்பியோடினார்.

கத்திக்குத்தில் காவலர்கள் இருவர் படுகாயம் அடைந்தனர். தப்பியோடிய ரவுடி பெண்டு சூர்யாவை அயனாவரம் காவல் உதவி ஆய்வாளர் மீனா முழங்காலில் சுட்டு பிடித்தார். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ரவுடி பெண்டு சூர்யாவுக்கு கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. திருச்சியில் ரவுடிகள் துரை, சோமுவை தொடர்ந்து சென்னையிலும் போலீசார் ரவுடியை சுட்டு பிடித்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆவுடையார்கோவில் அருகே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரத்ததான முகாம்

ஆவுடையார்கோவில் பிப்.23-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலை அடுத்த பெருநாவலூரில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் பொன்பேத்தி அரசு ஆரம்ப சுகாதாரம் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி நிதியாளர் கண்ணன். தலைமையேற்று இரத்ததான முகாமை துவக்கி வைத்தார். கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ரமேஷ் வரவேற்று பேசினார்.




அறந்தாங்கி அரசு மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவ அலுவலர் ராதாகிருஷ்ணன், பொன்பேத்தி மருத்துவ அலுவலர் ஜகசிற்பியன், பொன்பேத்தி வட்டார சுகாதார மேற்பார்வையாளர் விஸ்வநாதன், கரூர் சுகாதார ஆய்வாளர் ராம்குமார் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள், மருந்தாளுநர் சுவாமிநாதன் உள்ளிட்ட மருத்துவ குழுவினர், நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் கல்லூரி பேராசிரியர்களிடம் 60 யூனிட் இரத்தம் பெற்று அறந்தாங்கி அரசு மருத்துவமனை இரத்த வங்கிக்கு அளித்தனர். இந்நிகழ்ச்சியில், கல்லூரி இருபால் பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக பேராசிரியர் ஜீவரெத்தினம் நன்றி கூறினார்.

# அனைத்து அமைப்புகளிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க ஜனாதிபதி திரௌபதி முர்மு வலியுறுத்தல்

அருணாசலபிரதேசம் பிப்.23-

சட்டசபைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்று ஜனாதிபதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு அனைத்து சட்டசபைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்று அருணாசலப்பிரதேச சட்டசபை கூட்டத்தில் ஜனாதிபதி பேசினார். ஜனாதிபதி திரௌபதி முர்மு, 2 நாள் பயணமாக கடந்த திங்களன்று அருணாசல பிரதேசத்துக்கு சென்றார். 37-வது மாநில தின கொண்டாட்டத்தில் பங்கேற்றார். மேலும் மாநில அரசு அளித்த வரவேற்பில் கலந்து கொண்டார். இந்த நிலையில், நேற்று முந்தினம் அருணாசலபிரதேச சட்டசபையின் சிறப்பு கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்றார்.



கூட்டத்தில் அவர் பேசியதாவது:- வடகிழக்கு மாநிலங்கள் ஒரு காலத்தில் சாலை, ரயில் மற்றும் விமான போக்குவரத்து வசதிகள் இல்லாமல், பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கி இருந்தன. ஆனால், தற்போதைய மத்திய அரசு, வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக முன்னாள் பிரதமர் வாஜ்பாய், தனி அமைச்சகத்தை தொடங்கினார்.

பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து, அவரது கனவை தற்போதைய மத்திய அரசு நனவாக்கி வருகிறது. அதனால், அருணாசலபிரதேசம் மீது வளர்ச்சி என்னும் சூரியன் சுடர் விட்டு பிரகாசிக்கிறது. இன்றைய உலகில், சுற்றுச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம் ஆகியவை முக்கியமான பிரச்சினைகள். இவற்றுக்கு நாம் தீர்வு காண வேண்டும். இதற்கு அருணாசலபிரதேச ஆட்சியாளர்கள், ஒரு பிரகடனம் மூலம் தங்களது உறுதிப்பாட்டை தெரிவித்துள்ளனர். மற்ற மாநிலங்களும் இதை பின்பற்ற வேண்டும். நாட்டின் ஒட்டுமொத்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஒவ்வொரு துறையிலும் பெண்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும்.

அருணாசலபிரதேசம் உட்பட அனைத்து சட்டசபைகளிலும் அவர்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும். இதுபோல், மக்கள் பிரதிநிதிகள் இடம்பெறும் அனைத்து அமைப்புகளிலும் பெண்கள் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# கந்தர்வகோட்டை பகுதியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள்



கந்தர்வகோட்டை பிப்.23-

கந்தர்வகோட்டை வட்டாரத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் மற்றும் உபகரணங்களை வேளாண்மை இணை இயக்குநர் பெரியசாமி வழங்கினார்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் பஞ்சாயத்துகளில் ஒன்றான அரவம்பட்டியில் முன்னூறு பண்ணை குடும்பங்களுக்கு தலா. இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் அறுநூறு தென்னங்கன்றுகள் வேளாண் உழவர் நலத் திட்டம் மூலமாக முழு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. நேற்று நடைபெற்ற நிகழ்வில் வேளாண்மை இணை இயக்குநர் பெரியசாமி கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் விநியோகம் செய்து தென்னங்கன்றுகள் நடவு செய்தல் மற்றும் பராமரித்தல் குறித்து விளக்கி கூறினார்கள்.

நடப்பு 2022-2023 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் புதுநகர் கிராமத்தை சேர்ந்த திருமூர்த்தி, த/பெ.மணிவேல் என்ற விவசாயிக்கு மானிய விலையில் வழங்கப்பட்ட ரோட்டாவேட்டர் கருவியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். பின்னர் கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டம், நெல்லுக்கு பின் உளுந்து சாகுபடி திட்டம், முதலமைச்சரின் மானாவாரி மேம்பாட்டு திட்டம் போன்றவைகளின் கீழ் வேளாண்பண்ணைகருவிகள், விசைத்தெளிப்பான், உளுந்து விதைகள், ஜிப்சம், ஜிங்க் சல்பேட் முதலான இடுபொருட்களை 50 சதவீத மானியத்தில் தகுதியுடைய பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில் கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மைஉதவிஇயக்குநர் அன்பரசன், வேளாண்மை அலுவலர் ஜெயவேலன், துணை வேளாண்மை அலுவலர் முருகன், உதவி விதை அலுவலர் நாகராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரெகுநாதன், சங்கர், செல்வன், கமலி மற்றும் காளிதாஸ், அட்மா திட்ட பணியாளர்கள் ராஜிவ், சங்கீதா சுப்பிரமணியன் மற்றும் ஐஸ்வர்யா ஆகியோர் கலந்துகொண்டனர்.



விருதுநகர் மாவட்டத்தில், இந்து தமிழ் திசை நாளிதழ் மற்றும் வாக்கரூ இணைந்து நடத்திய "நடப்பதினால் உண்டான நன்மை"என்ற தலைப்பில் பள்ளி குழந்தைகளுக்கான நடை பயிற்சி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாவட்ட அளவில் அரசு பள்ளி மாணவர்கள் பங்கேற்ற வண்ணம் தீட்டுதல், கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவியருக்கு மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் லோக்கல் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

# குழந்தைகளை 6 வயதில் தான் 1-ஆம் வகுப்பில் சேர்க்க வேண்டும்

## மத்திய அரசு உத்தரவு

*டெல்லி பிப்.23-*

*குழந்தைகளை 6 வயதில் தான் 1-ஆம் வகுப்பில் சேர்க்க வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*1-ஆம் வகுப்பில் மாணவர்களை சேர்க்கும் வயதை 6 ஆக உயர்த்த வேண்டும் என மாநில அரசுகளுக்குமத்திய அரசு கடிதம் எழுதி உள்ளது. 6 வயது முடிந்த பிறகு 1-ஆம் வகுப்பில் சேர்க்க வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் மத்திய கல்வித்துறை அமைச்சகம்*



*உத்தரவிட்டுள்ளது. 3 வயதில் பிரி - பிரைமரி வகுப்பில் சேர்க்கலாம். 3 ஆண்டுகள் பிரிகேஜி, எல்கேஜி, யுகேஜி பயில வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அடிப்படை கற்றலை மேம்படுத்தும் நோக்கில் மாணவர்களின் சேர்க்கை வயதை உயர்த்த மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.*

# துணை ஜனாதிபதியின் தமிழக வருகையையொட்டி தலைமைச் செயலாளர் இறையன்பு ஆலோசனை

சென்னை பிப்.23-

துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழகத்துக்கு வர உள்ளார்.

துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழகத்துக்கு வர உள்ளார். இதையொட்டி, முன்னேற்பாடுகள் குறித்து தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இதில், கவர்னரின் முதன்மைச் செயலாளர் ஆனந்த்ராவ் பாட்டில், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை



கமிஷனர் ஆர்.லால்வேனா, பொதுத்துறை செயலாளர் டி.ஜெகநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், பொதுத்துறை அரசு துணை செயலாளர் எஸ்.அனு, பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை கமிஷனர் எஸ்.சேக் அப்துல் ரகுமான், ராணுவம், கப்பற்படை, போலீஸ் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

# உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்தியாவின் திலோத்தமா சென்

எகிப்து பிப்.23-

எகிப்தில் நடந்து வரும் உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் திலோத்தமா சென் வெண்கல பதக்கம் வென்று உள்ளார்.

எகிப்து நாட்டின் கெய்ரோ நகரில் சர்வதேச துப்பாக்கி சுடுதல் கூட்டமைப்பு சார்பிலான 2023-ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடந்து வருகிறது. ரைபிள் மற்றும் பிஸ்டல் ஆகிய பிரிவுகளுக்கான போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், 10 மீட்டர் மகளிர் ஏர் ரைபிள் பிரிவுக்கான போட்டி ஒன்றில் டாப் 8 வீராங்கனைகளில் ஒருவராக (262.0 புள்ளிகள்) இந்திய வீராங்கனை



திலோத்தமா சென் முன்னேறினார். இதனை தொடர்ந்து பதக்கத்திற்காக நடந்த போட்டியில், அவர் வெண்கல பதக்கம் வென்றார்.

0.1 என்ற புள்ளி கணக்கில் தங்க பதக்கம் வெல்லும் வாய்ப்பு அவருக்கு நழுவி போனது. இந்த போட்டியில் இங்கிலாந்து நாட்டின் சியோனைத் மெகிந்தோஷ் அதிரடியாக விளையாடி, சுவிட்சர்லாந்து நாட்டின் வீராங்கனை மற்றும் ஒலிம்பிக் சாம்பியனான நினா கிறிஸ்டன் என்பவரை 16-8 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். திலோத்தமா சென்னின் பதக்க வெற்றியால் இதுவரை நடந்த போட்டிகளில் மொத்தம் 5 பதக்கங்கள் இந்தியாவுக்கு கிடைத்துள்ளன. இது 2-வது வெண்கல பதக்கம் ஆகும். இது தவிர இந்தியா 3 தங்க பதக்கங்களையும் வென்று உள்ளது. இதேபோன்று பதக்க பட்டியலிலும் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதற்கடுத்த நாட்களில் இன்னும் 4 இறுதி போட்டிகள் நடைபெற உள்ளன.

# ஜார்கண்ட் மாநிலத்தில் 12 நாட்களில் 16 பேரை கொன்ற யானை-மக்கள் அச்சம்

ஜார்கண்ட் பிப்.23-

ஜார்கண்ட் மாநிலத்தில் ராஞ்சி மற்றும் அதை சுற்றியுள்ள 4 மாவட்ட பகுதிகளில் ஒரு காட்டு யானை அட்டகாசம் செய்து வருகிறது.

கடந்த 12 நாட்களில் ஹசாரிபாக், ராம்கர், சத்ரா, லோகர்தகா மற்றும் ராஞ்சி மாவட்ட பகுதிகளில் 16 பேர் அந்த யானையின் தாக்குதலுக்கு பலியாகி உள்ளனர். ராஞ்சி மாவட்ட வனத்துறை அதிகாரிகள் இது குறித்து கூறும்போது, "ராஞ்சி மண்டல வனப் பகுதியில் 5 பேர் யானை தாக்கி இறந்துள்ளனர். கடந்த திங்களன்று யானையை



கண்ட கிராம மக்கள் சிலர் அதை சூழ்ந்து வேடிக்கை பார்த்த போது அவர்களை யானை துரத்தி தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யானைகளை யாரும் நெருங்க வேண்டாம், காலை மற்றும் மாலை வேளையில் யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்ற எச்சரிக்கையை பின்பற்றாததாலும் இதுபோன்ற உயிர்ப்பலிகள் நிகழ்ந்துள்ளன. பல்வேறு இடங்களிலும் நடந்த தாக்குதலில் ஈடுபட்டது ஒரே யானை போல தெரிகிறது. இருந்தாலும் அதை உறுதிப்படுத்த ஆய்வுகள் செய்து வருகிறோம். யானையை கட்டுப்படுத்த மேற்கு வங்காளத்தில் இருந்து நிபுணர் குழு அழைக்கப்பட்டு உள்ளது என்றனர். இந்நிலையில் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். கடந்த 2021-22 ஆம் ஆண்டில் ஜார்கண்டில் யானை தாக்கி 133 பேர் இறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியாவை ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரிக்க அனுமதி

டெல்லி பிப்.23-

டெல்லி துணை முதலமைச்சர் மணிஷ் சிசோடியாவை ஊழல் தடுப்பு சட்டத்தில் விசாரிக்க மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியாவை ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரிக்க மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. கருத்துப் பிரிவு மோசடி வழக்கில்



சிசோடியா மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிந்து விசாரணை நடத்த அனுமதி கோரப்பட்ட நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அனுமதி வழங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே டெல்லி கலால் வரி கொள்கை ஊழல் வழக்கு தொடர்பாக சிசோடியா வீடு, அலுவலகங்களில் சோதனை நடத்தி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ள சிபிஐ, அவரை விசாரணைக்கு ஆஜராக கோரி இரண்டு முறை சம்மன் அனுப்பியது குறிப்பிடத்தக்கது. எதிர்க்கட்சிகளை ஆம் ஆத்மி அரசு உளவு பார்ப்பதாக பாஜக குற்றம் சாட்டிய நிலையில் மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

# கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கல்வி சீர் எம்.எல்.ஏ. சின்னதுரை ஐந்து லட்சம் நிதி வழங்குவதாக உறுதி

*கந்தர்வகோட்டை பிப்.23-*

*ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு, இப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்களும், முன்னாள் மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் இணைந்து கல்வி சீர் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு கந்தர்வகோட்டை சட்டப்பேரவைஉறுப்பினர் மா. சின்னதுரை தலைமை வகித்தார். அனைவரையும் பள்ளி மாணவிகள் வரவேற்றனர். பள்ளிக்கு பொதுமக்கள் வழங்கிய கல்வி சீரில் பீரோல், ஸ்டில் ரேக், அதிநவீன தொலைக்காட்சி பெட்டி, நாற்காலி, அனைத்து வகுப்புகளுக்கும் தண்ணீர் குவளை, தலைவர்கள் புகைப்படங்கள், உலக உருண்டை, சிறுகுழந்தைகள் தரையில் அமர்ந்து படிக்க பாய், அனைத்து வகுப்பு அறைகளுக்கும் டைல்ஸ் அமைக்க முன் ஏற்பாடுகள் செய்தனர். கல்வி சீர் எடுத்துக்கொண்டு சட்டப் பேரவை உறுப்பினர், சமூக ஆர்வலர்கள் ஊர்வலமாக தாரை தப்பட்டை முழங்க பள்ளியை நோக்கி வந்தனர். நிகழ்ச்சியில் பேசிய சட்டப்பேரவை உறுப்பினர் இப்பள்ளி சில ஆண்டுகளில் நூற்றாண்டு விழா காண உள்ளது,*

*இந்த விழாவையும் தலைமை ஆசிரியர்*




*விஜயலட்சுமி முன்னின்று நடத்த வேண்டும் எனவும் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியநடுநிலைப்பள்ளியை மாவட்ட நிர்வாகமே திரும்பிப்பார்க்கும்அளவிற்கு உயர்த்தியபெருமைதலைமை ஆசிரியை விஜயலட்சுமி அவர்களை சேரும் எனவும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகள் என கூறினார்.*

*மேலும் பள்ளிக்கு தனது தொகுதி நிதியிலிருந்து ரூ 5 லட்சம் ஒதுக்கீடு செய்வதாக வாக்குறுதியளித்தார்.*

*நிகழ்ச்சியில் கந்தர்வகோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கவிதா சிவா, அக்கச்சிபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கங்காதரன், வர்த்தக சங்கத் தலைவர் மாரிமுத்து, அரவம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சிவரஞ்சனி சசிகுமார் பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் யாஸ்மின் சித்திகா, முத்துராமன், வினோதா சாமிநாதன், செந்தில் சட்டமன்ற உறுப்பினர் நேர்முக உதவியாளர் இளையராஜா, ஆசிரியர்கள் மாலா, சாந்தி, மைவிழி, சுதா, பாக்கியராஜ், வெங்கடேசன் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பெற்றோர்கள் ஊர் பொதுமக்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இறுதியாக பள்ளி தலைமை ஆசிரியை விஜயலட்சுமி நன்றி கூறினார்.*

# பாடியநல்லூரில் 8-வயது சிலம்பம் மாணவன் புதிய உலக சாதனை



செங்குன்றம், பிப்,23

சென்னை செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சியில் சிலம்பம் உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஸ்கூல் ஆஃப் இந்தியன் சிலம்பம் பயிற்சி பள்ளியின் மாணவர் ஞானேந்திரா (வயது 8 நான்காம் வகுப்பு படித்து வருகின்றார் ) இந்த சாதனையை நிகழ்த்தினார்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக சிலம்பம் ஆசான் பகவதிசந்திரசேகரன் இடத்தில் பயிற்சி பெற்றுவரும் இவர் சிலம்ப கலையில் உள்ள 10 வகையான பயிற்சி முறைகளை ஐந்து நிமிடத்தில் செய்து காண்பித்து இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாணவரின் முயற்சியைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு காவல்துறை டிஜிபி சைலேந்திரபாபு வாழ்த்துக் கூறி சான்றிதழ் மற்றும் பதக்கத்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியின்போது சிலம்ப பயிற்சியாளர் பகவதி சந்திரசேகரன் உடன் இருந்தார்.



காவிரி நீர் வாரிய ஒழுங்காற்று குழு கூட்டம் அதன் தலைவர் வினித் குப்தா தலைமையில் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரியை சேர்ந்த காவிரி நீர் ஆணையத்தின் துணை குழு உறுப்பினர்கள் கர்நாடகா மாநிலம் பெங்களூரில் அமைந்துள்ள மைசூரில். காவிரி நீர் பங்கீடு தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும்,காவிரி நீரின் அளவை ஆய்வு செய்வதற்காகவும் காவிரி நீர் பங்கீட்டின் துல்லியத்தை அளவிடுவதற்கான நதியின் மாதிரி ஆய்வுகளை வகுப்பதற்காகவும் கர்நாடக பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிடுவதற்காகவும் கண்காணிப்பு பொறியாளர் ராஜசேகரன் செயற்பொறியாளர் வீரச்செல்வம் உதவி பொறியாளர் மகேஷ் ஆகியோர் புதுவை அரசு சார்பாக அரசு முறை பயணமாக பெங்களூருக்கு சென்று இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

## அகில இந்திய கராத்தே சாம்பியன்ஸ் போட்டியில்

# காஞ்சிபுரத்தை சேர்ந்த நான்கு மாணவர்கள், மூன்றாம் இடத்தை பிடித்து வெண்கலப் பதக்கம் வென்றனர்



காஞ்சிபுரம், பிப். 23 -

காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு கராத்தே அசோசியேஷன் கீழ் இயங்கி வரும் சாம்பியன் ஸ்போர்ட்ஸ் கராத்தே அகாடமி. மாஸ்டர் ஆர். கே.பிரகாஷ் தலைமையில் இயங்கி வருகின்றது.

இக்கராத்தே அகாடமியில் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்காப்பு கலையாக கராத்தே பயின்று வருகின்றனர். இவர்களுக்கு தினந்தோறும் இரண்டு மணி நேரம் என மூன்று பகுதிநேரமாக மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

இவ்வாறு பயிற்சி பெறும் மாணவர்கள் தமிழ்நாடு கராத்தே அசோசியேஷன் கீழ் மாநில அளவிலான கராத்தே போட்டிகளில் பங்கேற்று அவற்றில் தங்கப் பதக்கம் வெல்லும் முதன்மை மாணவர்கள் அகில இந்திய கராத்தே போட்டியில் பங்கேற்பார்கள். அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பாக 5 மாணவர்களும் தமிழக மாநிலத்திலிருந்து மொத்தம் 33 மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் டேராடூன் பகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் 17, 18, 19 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய கராத்தே போட்டியில் காஞ்சிபுரத்தை சேர்ந்த CSK அகாடமி கராத்தே மாணவர்கள் நான்கு வெண்கல பதக்கங்களை வென்று மூன்றாம் இடத்தை பெற்றனர்.

மொத்தம் தமிழக மாநிலத்திலிருந்து 33 கராத்தே மாணவர்கள் சென்ற நிலையில் 10 பதக்கங்களை வென்றனர். அவற்றில் காஞ்சிபுரத்தை சேர்ந்த மாணவர்கள் ஐந்து பேரில் 4 பேர் வெண்கலப் பதக்கம் வென்றது பெருமைக்குரியதாக சாம்பியன் ஸ்போர்ட்ஸ் கராத்தே அகாடமி மாஸ்டர் ஆர்.கே.பிரகாஷ் தெரிவித்தார்.

மேலும் மாதேஸ்வரன் சீனியர் கராத்தேவில் வெண்கல பதக்கமும், ஹரிஷ் ராகவேந்திரன், பேரரசு குழு உறுப்பினர் கட்டாவில் வெண்கல பதக்கத்தையும், கீர்த்தனா 55 கிலோ எடை பிரிவில் வெண்கல பதக்கத்தையும் வென்றனர். இந்திய அளவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று மாணவ, மாணவிகள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தனர்.

# ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் வழக்கறிஞர் அ.ஆ.அகத்தியன் பிறந்தநாள் விழா

## 20 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன



மேல்மருவத்தூர், பிப். 23 -

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆன்மீக குரு பங்காரு அடிகளாரின் பேரனும், ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கத் தலைவர் கோ.ப.அன்பழகன், ஆஷா ஆகியோரின் மகன் வழக்கறிஞர் அ.ஆ.அகத்தியன் பிறந்தநாள் விழா ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி ஆதிபராசக்தி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. வழக்கறிஞர் அ.ஆ.அகத்தியன் கலந்து கொண்டு ஆதிபராசக்தி அம்மனுக்கு தீபாராதனை காட்டி பூஜை செய்தார்.

இதனைத் தொடர்ந்து தாத்தா பாட்டியான ஆன்மீக குரு பங்காரு அடிகளார், ஆன்மிக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளாரிடம் காலில் விழுந்து ஆசி பெற்றார். சித்தர் பீட வளாகத்தில் செவ்வாடை பக்தர்களுடன் தனது பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடினார்.

பின்னர் பெரும்பேர் கண்டிகை முதியோர் இல்லம், பொலம்பாக்கம் தொழு நோயாளி மையம், பெருங்கருணை கிராமத்தில் உள்ள எய்ட்ஸ் நோயாளிகள் இல்லம், மதுராந்தகம் 7 ஸ்டார் அனாதை குழந்தை இல்லம் ஆகிய இடங்களில் அன்னதானம், ஆடைகள், மின்விசிறி, முதலுதவி பெட்டிகள், அரிசி, மளிகை பொருட்கள் ஆகியவற்றை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து மாலை 6 மணி அளவில் மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் ஞான பீடத்தில் அ.ஆ.அகத்தியன் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கத் தலைவர் கோ.ப அன்பழகன் தலைமை தாங்கினார். பிரசன்னா வெங்கடேஷ், வழக்கறிஞர் ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், ஆசிரியர் சீனிவாசன் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் வந்தவாசிமுன்னாள்எம்பிதுரை, சினிமா சண்டை பயிற்சியாளர் பெசன்ட் நகர் ரவி, சினிமா நடிகர்கள் பூவையார், பழனி பட்டாளம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர். கோ.ப.அன்பழகன் சிறப்புரை ஆற்றினார்.

மேலும் 20 லட்சம் மதிப்பிலான 3 இருசக்கர வாகனம்,23 சைக்கிள், 21 தையல் இயந்திரம், 3 எல் இ டி டிவி, 2 கறவை மாடு, 2 தள்ளுவண்டி, 1 ஸ்பிரேயர் மெஷின், டீஸ்டால்,500 புடவை ,200 பெட்ஷீட், 200 கடிகாரம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிப் பொருட்களை வழக்கறிஞர் அ.ஆ.அகத்தியன் ஏழை, எளியவர்களுக்கு வழங்கினார்.

இந்த விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை விருந்தளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆன்மீக மக்கள் தொண்டு இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் லிங்கநாதன், சிவக்குமார், உள்ளிட்ட நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# காதலனுடன் கருத்து வேறுபாடு ஓடும் மின்சார ரயிலில் இருந்து குதித்து கல்லூரி மாணவி பரிதாப பலி



எண்ணூர், பிப்,23

சென்னையை அடுத்த மீஞ்சூர்பகுதியில்வசித்துவந்தவர் கனிமொழி (வயது 21) இவர் சென்னை அண்ணா சாலை காயிதே மில்லத் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பிஏ படித்துவந்தார்.


கனிமொழியும் அதே பகுதியைச் சேர்ந்த நிஷாந்த் குமார் வயது 24 என்பவரும் ஐந்து ஆண்டுகளாக காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்பு இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று கல்லூரி முடிந்து மின்சார ரயிலில் மீஞ்சூர் நோக்கி கனிமொழி சென்று கொண்டிருந்தார்.

காதலன் நிஷாந்த் குமாருடன் செல்போனில் பேசியபடியேபயணம்செய்தார். இந்த நிலையில் மீண்டும் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்படவே மனம் உடைந்த கனிமொழி எண்ணூர் கொசஸ் தலை ஆற்றின் மேல் ரயில் சென்ற போது திடிரென ஆற்றில் குதித்தார் . இதை பார்த்த சக பயணிகள் அதிர்ச்சி அடைந்து சத்தம் போட்டனர்.இதுகுறித்து கொருக்குப்பேட்டை இரும்பு பாதை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது .பின்னர் தீயணைப்பு வீரர்கள் உதவியுடன்ஆற்றில்தேடியதில் அவர் இறந்த நிலையில் உடல் மீட்கப்பட்டது. இது தொடர்பாக கொருக்குப்பேட்டை இரும்பு பாதை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# வேலூர் அணைக்கட்டு கெங்கநல்லூரில் பயணிகள் நிழற்கூடம் தரமற்ற கட்டுமான பணியினால் கட்டும் போதே இடிந்து விழும் அவலம்

## பொதுமக்கள் அதிர்ச்சி



வேலூர், பிப். 23 -


வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கெங்கநல்லூர் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பயணிகள் நிழற் கூடம் தரமற்ற முறையில் கட்டப்பட்டு வந்ததினால் தானாக கீழே விழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த கட்டுமான பணியில் போதிய கம்பி, சிமெண்ட் பயன்படுத்தாமல் குறைவாக பயன்படுத்தி தரமற்ற முறையில் கட்டப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால்தான் கட்டிடம் இடிந்து விழுகிறது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் (21/2/2023) 11 மணி அளவில் திடீரென்று கட்டிடம் உதிரத் தொடங்கியது. கட்டிடத்தின் முன் பகுதியானது சரிந்து கீழே விழுந்து கம்பிகள் தொங்கி கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் அங்கே பொதுமக்கள் யாரும் நடமாட்டம் இல்லாத காரணத்தினால் அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

மக்கள் வரிப்பணத்தில், கட்டிட விதிமுறைப்படி முறையாக செயல்படாமல், தரம் குறைவாக கட்டிக் கொண்டிருக்கும் இந்த கட்டிடத்தை கட்டுமான பணி ஆய்வு குழு அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். அலட்சியமாக இது போன்று விதிமுறைகளை மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும், கட்டிடப் பணிகளில் கவனக்குறைவாக, தரமற்ற முறையில் செயல்படுபவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்திய பங்குச்சந்தை கடும் வீழ்ச்சி – அதானி குழும பங்குகள் ஒரே நாளில் பங்கு ஒன்றுக்கு ரூ.150 சரிவு



டெல்லி பிப்.23-

இந்திய பங்குச்சந்தையில் நேற்று வர்த்தகம் தொடங்கியது முதலே சரியத் தொடங்கியது. நடப்பு வாரத்தில் இந்திய பங்குச்சந்தை ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. அதேவேளை, ஹிண்டன் பெர்க் ஆய்வு அறிக்கை வெளியான நாளில் இருந்து அதானி குழுமத்தின் பங்குகள் பெரும் சரிவை சந்தித்து வருகின்றன. இந்நிலையில், இந்திய பங்குச்சந்தை நேற்று வர்த்தகம் தொடங்கியது முதலே சரியத் தொடங்கியது.

குறிப்பாக, அதானி நிறுவன பங்குகள் பெரும் சரிவை சந்தித்தன. வர்த்தக நாளின் முடிவில் சென்செக்ஸ் 927 புள்ளிகளும், நிப்டி 272 புள்ளிகளும் வீழ்ச்சியடைந்தது. இதனால் வர்த்தகர்கள் அதிர்ச்சியடைந்தனர். அதிலும் குறிப்பாக அதானி குழும பங்குகள் பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. 1,540 ரூபாய்க்கு தொடங்கிய அதானி நிறுவன பங்கு விலை வர்த்தக முடிவில் 1400 ரூபாயாக சரிந்துள்ளது. அதானி நிறுவன பங்குகள் ஒரே நாளில் பங்கு ஒன்றுக்கு 150 ரூபாய் சரிந்ததால் வர்த்தகர்களும், முதலீட்டாளர்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# அரியலூரில் முதலமைச்சர் கோப்பைக்கான நீச்சல் மற்றும் கபடி போட்டிகள்



அரியலூர் பிப்.23-

அரியலூரில்முதலமைச்சர் கோப்பைக்கான நீச்சல் மற்றும் கபடி போட்டிகள் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்காக, அரியலூர் மாவட்ட அளவில் பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பொதுப் பிரிவினர் உள்ளிட்ட பலரும் பங்கு கொள்ளும், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள், அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், கடந்த 4-ஆம் தேதி துவங்கி 24-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

அதன்படி கடந்த 21-ஆம் தேதி காலை முதல் மாலை வரை, அரியலூர் மாவட்ட அளவில் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த 63 மாணவர்கள், 50 மாணவிகள் உட்பட 113 பேர், கல்லூரிகள் அளவில் 15 மாணவர்கள் 18 மாணவிகள் உட்பட 33 பேர், பங்கேற்ற நீச்சல் போட்டிகள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 63 ஆண்கள் 31 பெண்கள் உட்பட 94 பேர், பங்கேற்ற ஓட்டப்பந்தயம், பேட்மிட்டன், கபடி, பந்துவீச்சு, உள்ளிட்ட விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளுக்கான துவக்க விழாவுக்கு, அரியலூர் மாவட்ட விளையாட்டு அலுவலர் லெனின் தலைமை வகித்தார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தட்சிணாமூர்த்தி, முதன்மைக் கல்வி அலுவலர் விஜயலட்சுமி மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# வேலூர் குடியாத்தத்தில் திருடிய மோட்டார் சைக்கிளை விற்க முயன்ற திருடர்கள் கைது




வேலூர், பிப். 23 -

வேலூர் மாவட்டம், குடியாத்தம் பகுதி மற்றும் அரசு மருத்துவமனை உள்ளிட்ட முக்கிய இடங்களில் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் திருடப்பட்டு வந்தது. இதில் சம்பந்தப்பட்ட ஞானவேல், தரணி ஆகிய இருவரையும் காவல்துறையினர் கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

குடியாத்தம் துணை காவல் கண்காணிப்பாளர் இராமமூர்த்தி தலைமையில் நகர காவல் ஆய்வாளர் லட்சுமி, நகர காவல் உதவி ஆய்வாளர் மணிகண்டன், தலைமை காவலர்கள் ஜெயக்குமார், சந்திரபாபு உள்ளிட்ட தனிப்படை காவல்துறையினர் குடியாத்தம் சுற்று வட்டாரப் பகுதிகள் மற்றும் அரசு மருத்துவமனை உள்ளிட்ட முக்கிய இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை தீவிரமாக ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் குறிப்பிட்ட நபர் மோட்டார் சைக்கிள்களை திருடுவது தெரியவந்தது. எனவே 20, 21 ஆம் தேதியில் காவல்துறை தனிப்படை குழுவினர் அரசு மருத்துவமனை பகுதிகளில் மறைந்திருந்து கண்காணித்து வந்தனர்.

இந்த காவல்துறை தீவிரக் கண்காணிப்பின்போது அந்த குறிப்பிட்ட நபர் தரணி மோட்டார் சைக்கிளை திருடிய போது சுற்றி வளைத்து பிடித்தனர். இதனைத் தொடர்ந்து தீவிரமாக விசாரணை மேற்கொண்டதில் திருடிய மோட்டார் சைக்கிள்களை குடியாத்தம் அடுத்த கல்லூர் பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் ஞானவேல் (வயது 38) என்பவரிடம் கொடுத்து விற்பதும், கைமாற்றி விற்பதும் இந்த நபருக்கு உடந்தையாக செயல்பட்டு வந்ததும் விசாரணையில் வெளிச்சமானது.

இதனைத் தொடர்ந்து குடியாத்தம் நகர காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து மோட்டார் சைக்கிள்களை திருடிய தரணி மற்றும் திருட்டுக்கு உடந்தையாக இருந்த ஞானவேல் ஆகியோரை கைது செய்தனர். மேலும் அவர்கள் அளித்த தகவலின் பேரில் பத்து இருசக்கர மோட்டார் சைக்கிள்களை காவல் துறையினர் மீட்டனர். மேலும் காவல்துறை தனிப்படை குழுவினர் இந்த குற்றவாளிகளுடன் இன்னும் வேறு யார் யாரெல்லாம் தொடர்பில் உள்ளார்கள் என தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தில்லையாடி வள்ளியம்மையின் 109 வது நினைவு தினம் மாவட்ட ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்



மயிலாடுதுறை, பிப்,23

இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகள் பங்கேற்பதற்கு முன்பாக தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து போராட்டம் நடைபெற்றது. 1913 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரியையும் எதிர்த்து மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இப்போராட்டத்தில் தமிழர்கள் பலரும் பங்கேற்றனர். அவர்களில் மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியை அடுத்த தில்லையாடி வம்சாவழியை சார்ந்த வள்ளியம்மையும் ஒருவர். தனக்கு முதன் முதலில் விடுதலை உணர்வை ஊட்டியவர் தில்லையாடி வள்ளியம்மை என்று காந்தியடிகள் நினைவு கூர்ந்துள்ளார். 1913 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க சிறையில் அடைபட்ட வள்ளியம்மை, 1914 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இதே நாளில் உயிர்நீத்தார்.

காந்தியால் நினைவு கூறப்பட்ட தில்லையாடி வள்ளியம்மையின் 109 வது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, தில்லையாடியில் அமைந்துள்ள வள்ளியம்மை நினைவு மணி மண்டபத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்தனர்.

இந்நிகழ்வில் சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் அர்ச்சனா, மக்கள் செய்தி தொடர்புஅலுவலர்ரவிச்சந்திரன், செம்பனார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினிஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல், மாவட்ட ஒன்றிய உறுப்பினர் துளசிரேகா ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலட்சுமி, வட்டாட்சியர் புனிதா, தில்லையாடி ஊராட்சி மன்ற தலைவர் ரெங்கராஜ், சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் தில்லையாடி வள்ளியம்மைஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி நினைவஞ்சலி செலுத்தினர்.

மேலும், மணிமண்டபத்தில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை உள்ளிட்ட சுதந்திர போராட்ட தியாகிகளின் வரலாற்று ஆவணங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு அவற்றின் விளக்கத்தை கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து சுதந்திர போராட்ட தியாகிகளின் நினைவை போற்றும் விதமாக தில்லையாடியிலிருந்து மயிலாடுதுறை வரையிலான தியாகச்சுடர் ஓட்டத்தை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.

# சாலை வசதி செய்து தரக்கோரி பள்ளி மாணவர்கள் பெற்றோர்களுடன் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்



திருவள்ளூர், பிப். 23 -

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்டது அரியப்பாக்கம் கிராமம். இங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

இந்நிலையில், கிராமத்திலிருந்து இந்த பள்ளிக்குச் செல்லும் வழியில் தனிநபர் ஒருவர் சாலையை ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் மேற்கொண்டு வருகிறார். இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவ-மாணவிகள் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு சென்னை - ஊத்துக்கோட்டை தேசிய நெடுஞ்சாலை வழியாக பள்ளிக்குச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு போக்குவரத்து நெரிசல் நிறைந்த அச்சாலை வழியாக செல்லும் போது மாணவர்கள் விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் அவ்வழியே செல்லும் வாகன ஓட்டிகள் பள்ளிச் செல்லும் மாணவர்களை கேலியும், கிண்டலும் செய்கின்றார்களாம்.

எனவே, சாலை ஆக்கிரமிப்பை அகற்றி பள்ளி மாணவர்கள் சென்று வர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு கிராம மக்கள் பலமுறை கோரிக்கை வைத்தும் உரிய நடவடிக்கை எடுக்க வில்லை.

இந்நிலையில், நேற்று மதியம் பள்ளியை புறக்கணித்து சுமார் 30-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களது பெற்றோருடன் பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு ஊர்வலமாக வந்தனர். பின்னர், வட்டார வளர்ச்சி அலுவலக வாயிலில் அமர்ந்து முற்றுகையிட்டு வேண்டும், வேண்டும் சாலை வசதி வேண்டும். அகற்று, அகற்று ஆக்கிரமிப்பை அகற்று! என்று கோஷம் எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் ஆகியோர் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். மேலும், இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர். இதன் பின்னர், அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர்.



மகா சிவராத்திரி விழாவினை முன்னிட்டு புதுக்கோட்டை மறைமலை நகரில் உள்ள பிரஜாபிதா பிரம்ம குமாரிகள் சிவஞான பவனில் மகாகாளேஸ்வரர் ஜோதிலிங்க தளத்தில் 87வது சிவஜெயந்தி விழா நடைபெற்றது. விழாவில் புதுக்கோட்டை காந்தி பேரவை நிறுவனர் தினகரன், தமிழ்நாடு மின்வாரிய உதவி மின் பொறியாளர் பன்னீர்செல்வம், தஞ்சாவூர் பிரம்மகுமாரிகள் சகோதரி ராஜயோகினி பி.கு. ஞானசௌந்தரி, யோகா ஆசிரியர் செல்வராஜ், புதுகை வரலாறு நிறுவனர் சு.சிவசக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில் டாக்டர் ராமமூர்த்தி, தமிழ்நாடு ஊராட்சி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ராஜசேகர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தீபம் ஏற்றி வழிபாடு செய்தனர்.

# புதுக்கோட்டை மாவட்ட பாஜக துணைத் தலைவருக்கு மாநிலத் தலைவர் வாழ்த்து



புதுக்கோட்டை , பிப்.23-

புதுக்கோட்டை மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் துணைத் தலைவரும் இந்திய உணவு பாதுகாப்பு துறை கழக உறுப்பினருமான ஜீவானந்தம் தனது 52 வது வயதில் பிறந்த நாளை கொண்டாடும் வகையில் தான் வாழும் காலத்திற்குப் பிறகும் தனது கண்கள் இம்மண்ணில் பிரகாசிக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையில் கண்ணப்ப நாயனார் கண்தானப் பிரச்சார மையத்தின் தலைவர் கோவிந்தராஜனிடம் தனது கண்களை தானம் செய்வதற்கான படிவத்தினை வழங்கினார்.

ஜீவானந்தத்தின் சமூக நலன் சார்ந்த செயலினை பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் வெகுவாக பாராட்டியுள்ளனர். இந்த நிகழ்வில் பாஜக மாவட்ட நிர்வாகிகள் பெரம்மன், மணி சுந்தரேசன், மணிராஜ், சின்னத்துரை, ஜெகன், கார்த்திகேயன், முருகையன் உள்ளிட்ட ஏளமகள் கலந்து கொண்டு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.




# ஈரோட்டில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதன் மீது விதிமுறைகளை மீறியதாக வழக்குப்பதிவு

ஈரோடு பிப்.23-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் போட்டியிடுகிறார். இந்நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா மீது விதிமுறைகளை மீறியதாக காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 20-ஆம் தேதி உரிய அனுமதி பெறாமல் ஆலமரத்தெருவில் பிரச்சாரம் மேற்கொண்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா மற்றும் 30 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.



திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மாதவ பெருமாள் கோவில் மற்றும் லால்குடி வட்டம் தாளக்குடி கிராமங்களில் நீர்வளத்துறை கனிமம் மற்றும் கண்காணிப்பு கூட்டத்திற்கு உட்பட்ட கொள்ளிடம் ஆற்றில் மணல் குவாரியை மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் எஸ்பி சுஜித் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் அபிராமி, லால்குடி வருவாய் கோட்டாட்சியர் வைத்தியநாதன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் குணசீலன், நீர்வளத்துறை கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்ட பொறியாளர் பவளக்கண்ணன், உதவி செயற்பொறியாளர் ஜெயராமன், உதவி இயக்குனர் சுரங்கம் மற்றும் புவியியல் துறை பாலமுருகன், வட்டாட்சியர்கள் சக்திவேல் முருகன், சிஸிலினா சுகந்தி உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

# கறம்பக்குடி அருகே டீம் மருத்துவமனை சார்பாக தமிழக முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாம்

கறம்பக்குடி, பிப்.23-

தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாம் டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை நிர்வாக இயக்குநர் சலீம் வழிகாட்டுதலின்படி, டீம் மருத்துவமனை சார்பாக புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, தீத்தானிப்பட்டி ஊராட்சி அங்கன்வாடி மையத்தில் நடைபெற்றது. தீத்தானிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ரெத்தினம் மற்றும் சமூக ஆர்வலர் ரெங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் முகாமானது தொடங்கப்பட்டது.



உலக மக்கள் தொகையில் 33 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் தொற்றா நோய்களுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர். உலகில் ஏற்படும் மரணங்களில் 63 சதவீதமானவை தொற்றா நோய்கள் காரணமாகவே ஏற்படுகின்றது. இயந்திரமாகிப் போன வாழ்க்கை முறை மாற்றங்கள், உடற்பயிற்சி இல்லாமை, துரித உணவு வகைகள், மன அழுத்தம், மது அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் ஆகிய காரணங்களால் தொற்றா நோய்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்துவதற்காக தொற்றா நோய்கள் விழிப்புணர்வு மருத்துவ முகாமானது தமிழக முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் நடைபெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மருத்துவ முகாமில் ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கம், உடற்பயிற்சி, புகைப்பிடித்தல், மது பழக்கம் நிறுத்தம் மற்றும் இருதய நோய், சர்க்கரை நோய், புற்று நோய், சுவாச நோய் மற்றும் மனநல பிரச்சினைகள் வருவதைப் பற்றி டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இருக்கை மருத்துவர் அறிவரசு எடுத்துரைத்தார். அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கினார். முகாமில் இரத்த அழுத்தம், உயரம், எடை, வெப்பத்தின் அளவு, இரத்த சர்க்கரை அளவு போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டன.

இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர் ஜோசப் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மதுபாலன் ஆகியோர் செய்திருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களின் உயர்கல்வி பயில்வதற்கு ஆர்வமூட்டும் செயல்பாடாக, அரசு கல்லூரிகளுக்கு களப்பயணம் மேற்கொள்வது தொடர்பாக, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

## சம்பட்டிவிடுதி ஊராட்சி

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.

### வாரசந்தை ஏல அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சம்பட்டிவிடுதி ஊராட்சிக்கு சொந்தமான பொதுச் சந்தையின் 2022-2023 ம் ஆண்டுக்கான ஏலம் எதிவரும் 27.02.2023 காலை 10.00 மணிக்கு சம்பட்டிவிடுதி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சம்பட்டிவிடுதி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களால் கண்காணிப்புக்குழு முன்பாக நடைபெற உள்ளது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் கீழக்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஏலத்தில் கலந்துகொள்ள அறிவிக்கப்படுகிறது.

### ஏல நிபந்தனைகள்

1. ஏலம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட விவரபடி ஊராட்சித் தலைவர்(Executive Authority) அவர்களால் நடத்தப்படும்.
2. ஏலம் எடுப்பவர் ஏல நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்தல் வேண்டும்.
3. மேற்படி சந்தை ஏலம், சந்தையில் தற்காலிகமாக அமைக்கப்படும் காய்கறிக்கடைகள் காய்கறிகளை ஏற்றி வரும் லாரி போன்ற இதர வாகனங்கள், வண்டிகள், தற்காலிக மீன்கடைகள், மீன் ஏற்றி வரும் லாரி / இதர வாகனங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களிடம் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச கட்டணங்களை வசூலிப்பதற்கான ஏலம் மட்டுமே ஆகும்.
4. ஏலம் அமலில் உள்ள காலம் 27.02.2023 முதல் 26.02.2024 முடிய உள்ள காலமாகும்.
5. ஏலம் உரிய முறையில் நடைபெறுவதை மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஊராட்சிக் குழு கண்காணித்து உறுதி செய்யும்.
6. ஏலத்தின் குறைந்தபட்ச உத்தேச மதிப்பு விபரம் ஏலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஏலம் நடத்தும் அதிகாரியால் (ஊராட்சித் தலைவரால்) அறிவிக்கப்படும்.
7. ஏலத்திற்கான வைப்புத் தொகை மற்றும் ஆரம்பத் தொகை ரூ.10.000/ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
8. ஏலத்தில் கலந்து கொள்பவர் சரியான முகவரிக்குரிய ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் ரூ.10,000/ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)-த்திற்கான சால்வன்சி சான்றிதழுடன் ஆரம்பத்தொகை மற்றும் வைப்புத் தொகையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
9. ஊராட்சியில் ஏற்கனவே எவ்வித் ஏலத்தொகையும் செலுத்துவதில் நிலுவையிருப்பவர்கள் இந்த ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது.
10. ஏலம் எடுப்பவர் ஏல விதிகளையோ இதர அலுவகை விதிகளையோ மீறினால் அல்லது விதிகளை மீறி சந்தையில் கட்டுமானம் ஏதும் கட்டினால் உடன் ஏலத்தை ரத்து செய்ய ஊராட்சிக்கு அதிகாரம் உண்டு.
11. ஏலப் போட்டியின் மூலம் கூடுதல் தொகைக்கு ஏலம் எடுத்தவர் உடன் ஏலத் தொகை முழுவதையும் ஊராட்சியில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. ஏலம் எடுக்கும் வாய்ப்பை இழந்தவருக்கு ஆரம்பத்தொகை மற்றும் காப்பு வைப்புத்தொகை உடன் திரும்ப வழங்கப்படும்.
13. ஏலம் எடுத்தவரின் ஆரம்பத்தொகை மற்றும் காப்பு வைப்புத் தொகையை ஏலம் நடைபெறும் ஆண்டின் ஊராட்சி தணிக்கை முடிந்த பின்னர் தனிக்கைத் தடை ஏதுமில்லை என உறுதி செய்த பின்னர் திரும்ப வழங்கப்படும்.
14. ஏலம் ஊராட்சி மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்) ஆகியவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே ஏலம் உறுதி (Confimation of Action) செய்து ஆணையிடப்படும்.
15. ஏலம் உறுதி செய்யப்பட்டு ஆணையிடப்பட்ட பின்னர், ஏலம் எடுத்தவர் ரூ.20/க்கான பத்திரத்தில் ஏல நிபந்தனைகள், ஏலதாரர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து ஊராட்சித் தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கையெழுத்திட்ட பத்திரத்தை (Deed Agreement) ஊராட்சியில் ஒப்படைக்க வேண்டும்.
16. ஏல ஒப்பந்தப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின், ஏலத்திற்கான ஏல அலுவலக நிபந்தனைக் கடிதம் (Licence) வழங்கப்படும்.
17. இந்த ஏலம் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அவ்வப்போதைய நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
18. ஏலம் நடைமுறையில் உள்ள காலத்தில் பொது நலன் கருதி எவ்வித காரணங்களும் குறிப்பிடாமல் ஏலத்தை தள்ளி வைக்கவோ அல்லது இரத்து செய்யவோ ஊராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.
19. ஏலம் எடுத்தவர் கடைகளில் கட்டணம் வசூல் செய்வதற்கான ரசீது புத்தகங்கள், தினசரிப் பதிவேடுகள் முதலியவற்றை ஊராட்சியின் அலுவலக முத்திரை பெறப்பட்ட பின்னரே பயன்படுத்த வேண்டும். அலுவலக முத்திரை இல்லாத ரசீதுகள் / பதிவேடுகள் செல்லாது.
20. சந்தை ஏலம், கட்டணம் ரசீது பதிவேடு முதலியவற்றை வாரம் ஒருமுறை (வெள்ளிக்கிழமை) ஊராட்சியில் காண்பித்து சரிபார்க்கப்பட்டு ஊரட்சி தலைவரது ஒப்பம் பெறவேண்டும்.

**தலைவர், ஊராட்சி மன்றம். சம்பட்டிவிடுதி.**

# புதுக்கோட்டையில் சாரண சாரணியர் இயக்கம் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



புதுக்கோட்டை , பிப்.23-

புதுக்கோட்டை பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பில் சாரணர் இயக்க நிறுவனர் பேடன் பவல் மற்றும் அவரது துணைவியார் லேடி பேடன் பவல் ஆகியோரது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பேரணியை புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிவண்ணன் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) ஆண்டனி, பள்ளித்துணை ஆய்வாளர் குரு. மாரிமுத்து மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், சாரண இயக்க மாவட்ட செயலாளர் சிவராஜா மற்றும் சாரண, சாரணியர் இயக்க பொறுப்பாளர்கள் மற்றும் சுமார் 600 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டார்கள்.

மேலும் இப்பேரணி புதுக்கோட்டை நகர மன்ற வளாகத்தில் துவங்கி வடக்கு ராஜா வீதி வழியே சென்று, கீழ ராஜவீதி வழியாக அண்ணா சிலை, பழைய பேருந்து நிலையம் , பிரகதம்பாள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள தேர்வுக்கூட அரங்கில் நடைபெற்றது. அனைத்து தொடர்ந்து புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலகத்தில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டது. மேலும் சாரண, சாரணிய மாணவ, மாணவியர்களுக்கு கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி, ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டது.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு புதுக்கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் கலந்து கொண்டு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கி மாணவ மாணவிகளை வாழ்த்தி பாராட்டி பேசினார். நிகழ்ச்சியை மாவட்ட செயலாளர் சிவராஜா மற்றும் ராமச்சந்திரன், சந்திரசேகரன், அமல்ராஜ், சிவயோகன், கந்தசாமி, மாவட்ட பொறுப்பாளர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# சீன விவகாரத்தில் வெளியுறவு அமைச்சர் தோல்வியடைந்து விட்டார்

# டெல்லி மேயர் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி





# புதுக்கோட்டையில் விபத்து ஒருவர் பலி 9 பேர் படுகாயம்


| சென்னை / புதுக்கோட்டை | 23.02.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டபிள்யூ. இ. பி. டுபோய்ஸ் , அமெரிக்க வரலாற்றாளர் (பி.1868) (இ.1963)



ராஜினி திராணகம , இலங்கை மருத்துவர், மனிதவுரிமைச் செயற்பாட்டாளர், கல்வியாளர் (பி.1954) (இ.1989)



மைக்கேல் டெல் , அமெரிக்கத் தொழிலதிபர் (பி.1965)



சக்தி வாசு , தமிழக நடிகர் (பி.1983)



## இன்றைய நினைவு நாள்

ஜான் குவின்சி ஆடம்ஸ் , அமெரிக்காவின் 6வது அரசுத்தலைவர் (பி.1767) (இ.1848)



மதுபாலா , இந்திய நடிகை (பி.1933) (இ.1969)



ஈ. வெ. கி. சம்பத் , தமிழக அரசியல்வாதி (பி.1926) (இ.1977)

